Register No. | | | | | | | | |

# TA3A

5246–22

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

CONSTITUTIONAL LAW — II

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : 2½ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically evaluate the immunities and privileges of the Members of the State Legislative Assembly in the light of Keshav Singh v. Speaker, Legislative Assembly of Uttar Pradesh, AIR 1965 All 349.

   சட்டமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகள் குறித்து கேசவ்சிங் எதிர் சபாநாயகர், உத்தரப் பிரதேச சட்டமன்றம், (AIR 1965 All 349) வழக்கின் துணை கொண்டு கூர்ந்தாய்வு செய்க.

2. Critically evaluate the appointment of Judges of the Supreme Court and High Courts by collegium in light of NJAC Judgment (AIR 2015 SCC 2463).

   கொலீஜியத்தின் மூலம் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் குறித்து NJAC வழக்கினை துணை கொண்டு கூர்ந்தாய்வு செய்க (AIR 2015 SCC 2463).

3. Examine the grounds for the proclamation of National Emergency and point out how far it transforms the Constitution into unitary form of Government.

   தேசிய நெருக்கடிநிலை அறிவிப்பதற்கான காரணங்களை ஆராய்ந்து மற்றும் அது எவ்வாறு நமது அரசமைப்பை ஒற்றையாட்சியாக மாற்றுகிறது என்பதை எடுத்துக்கூறு.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Examine the recent judicial trends on pardoning power of the President of India and the Governor of state.

   குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர் ஆகியோரது மன்னிக்கும் அதிகாரத்தைக் குறித்து நீதிமன்றத்தின் சமீபகால அணுகுமுறை பற்றி கூர்ந்தாய்வு செய்க.

5. Explain the differences between Ordinary bills and Money bills.

சாதாரண சட்ட முன்வடிவிற்கும், பண சட்ட முன் வடிவிற்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.

6. "No tax shall be levied or collected save by authority of law" – Comment.

"சட்ட அதிகாரமின்றி வரி விதிப்பதோ, திரட்டுவதோ கூடாது" - கருத்துரை தருக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Composition and powers of the Election Commission of India.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அமைப்பு மற்றும் அதிகாரம்.

(b) "Basic structure of the Constitution cannot be amended".

"இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சத்தை திருத்த இயலாது".

(c) Goods and Services Tax Council.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி குழு.

(d) Right to property under Article 300A.

உறுப்பு 300 A-யின் கீழ் சொத்துரிமை.

(e) Doctrine of Pith and Substance with decided cases.

தீர்மானிக்கப்பட்ட வழக்குகள் வழிநின்று மையக்கருப்பொருள் கோட்பாடு குறித்து விவரி.

(f) Full faith and credit clause.

முழு நம்பிக்கை மற்றும் நாணய வகையம்.

(g) Planning Commission and Finance Commission.

திட்டக்குழு மற்றும் நிதி ஆணைக்குழு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The parliament of India made a constitutional Amendment to decide on election dispute of Prime Minister and excluded it from judicial review and real power was conferred on the Parliament. Whether the Parliament can restrict the power of Court. Argue.

முதன்மை அமைச்சரின் தேர்தல் தொடர்புடைய வழக்குகளை நாடாளுமன்றமே முடிவு செய்யவும் மற்றும் நீதித்துறை மறு ஆய்விலிருந்து முதன்மை அமைச்சரின் தேர்தல் வழக்குகளை விலக்களித்தும் ஓர் அரசமைப்பு திருத்தச் சட்டத்தை இந்திய நாடாளுமன்றம் இயற்றியது. நாடாளுமன்றம் நீதித்துரையின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த இயலுமா? வாதுரைக்கவும்.

9. 'X' was dismissed from service based on the findings under Public Service Enquiry Act 1960. Subsequently 'X' was prosecuted under the various offences of the Prevention of Corruption Act and the Indian Penal Code. Is it sustainable? Advise.

   பொதுப்பணி விசாரணைச் சட்டம் 1960 இன் கீழான விசாரணை முடிவுகளின் படி 'X' என்பவர் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார். பிறகு ஊழல் தடுப்புச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழான பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது. இது நிலைநிற்கத்தக்கதா? அறிவுரைக்க.

10. "A suit was filed by the State of Kerala against the State of Karnataka under Article 131 raising a binding dispute relating to non-implementation of the binding decision rendered by the Inter-State water dispute Tribunal. Decide the maintainability of the suit.

   கேரள மாநிலம் உறுப்பு 131 இன் கீழ் மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பிரச்சனை தீர்ப்பாயம் வழங்கிய கட்டுப்படுத்தக்கூடிய தீர்ப்பை நிறைவேற்றவில்லை என்பது தொடர்பாக கர்நாடக மாநிலத்தின் மீது வழக்கு ஒன்றை தொடர்ந்தது. இந்த வழக்கின் செல்லுந்தன்மையை முடிவு செய்க.

---

Register No. [ | | | | | | | | ]

5247–22

**TA3B**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

LAND LAWS

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. State why the legislations under IX Schedule of the Constitution are guarded by courts?

   அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையின் கீழ் உள்ள சட்டங்களை நீதிமன்றங்கள் ஏன் கவனத்துடன் பாதுகாக்கின்றன?

2. Who is a 'Cultivating Tenant'? What is the provision for restoring him to the same land? When he cannot be restored?

   'பயிரிடும் குத்தகைதாரர்' என்பவர் யார்? அவரை திரும்பவும் உடைமையில் வைக்கும் வகையம் யாது? எப்போது அவரை திரும்பவும் உடைமையில் வைக்க இயலாது?

3. What is the procedure for the fixation of fair rent of a building under the T.N. Buildings (Lease and Rent control) Act 1960?

   1960-ஆண்டின் தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் கட்டிடத்தின் நியாய வாடகையை நிர்ணயிக்கும் நடைமுறை யாது?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the salient features of the Fixation of Ceiling on Land Act 1961.

   1961-ஆம் ஆண்டின் நில உச்சவரம்பு நிர்ணயித்தல் சட்டத்தின் சிறப்பியல்புகளை விளக்குக.

5. What is the procedure for the publication of notification under the Land Acquisition Act of 2013?

2013-ஆம் ஆண்டின் நிலக்கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ் அறிவிக்கை வெளியிடுதலின் நடைமுறை யாது?

6. State briefly the importance of the Tamilnadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Act 1972.

1972-ஆம் ஆண்டின் தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் குத்தகைப்பாக்கி (நிவாரணச்) சட்டத்தின் முக்கியத்துவத்தை சுருக்கமாகக் கூறு.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Kaieruwaramdar and Mattuvaramdar

கையேருவாரம்தார் மற்றும் மாட்டுவாரம்தார்

(b) Grounds of eviction of a cultivating tenant

ஒரு பயிரிடும் குத்தகைதாரரை வெளியேற்றுவதற்கான காரணங்கள்

(c) Bar of jurisdiction of civil courts

உரிமையியல் நீதிமன்றங்களின் ஆள்வரை வரம்புக்குத் தடை

(d) Tamilnadu Cultivating Tenants (Special Provisions) Act 1968.

1968-ஆம் ஆண்டின் தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (சிறப்பு வகையங்கள்) சட்டம், 1968

(e) Composite leases

கூட்டுக் குத்தகைகள்

(f) Alternative site

மாற்று மனையிடம்

(g) Standard Acre.

தரநிலை ஏக்கர்.

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' is the owner of the agricultural lands measuring an extent of 25 standard acres. 'A' gave 15 standard acres to his brother 'B' for life. Whether 'A' is holding land in excess of ceiling limit. If so, how much?

'அ' என்பவர் 25 தரநிலை ஏக்கர் விவசாய நிலத்தின் உரிமையாளராவார். 'அ' என்பவர் 15 தரநிலை ஏக்கர் நிலத்தை தன்னுடைய சகோதரர் 'ஆ' விற்கு வாழ்வுரிமை கொடுத்துவிட்டார். 'அ' என்பவர் நில உச்சவரம்பிற்கு மிகுதியாக நிலம் வைத்துள்ளாரா? அப்படியெனில் எவ்வளவு?

9. A cultivating tenant took a double crop field for tenancy. But he allowed it to become a single crop field. Has he committed any wrongful act? Can he be evicted? If so, under what provision he can be evicted?

ஒரு பயிரிடும் குத்தகைதாரர் இருபோகமும் விளையக்கூடிய நிலத்தைக் குத்தகைக்கு எடுத்தார். ஆனால் அந்நிலத்தை ஒரு போகம் விளையக்கூடிய நிலமாக மாறவிட்டு விட்டார். அவர் குற்றமிழைத்துள்ளாரா? அவரை வெளியேற்றலாமா? 'ஆம்' எனில் எந்த சட்ட வகையத்தின்கீழ் வெளியேற்றலாம்?

10. A landlord often interfered with the light used by the tenant. What is the remedy to the tenant?

ஒரு கட்டிட உரிமையாளர் அடிக்கடி வாடகைதாரர் உபயோகிக்கும் மின் விளக்கு சம்பந்தமாக இடையூறு செய்கிறார். வாடகைதாரருக்கான தீர்வழி யாது?

Register No. | | | | | | | | |

5148–22

TA3C

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

INTERPRETATION OF STATUTES

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Every word in a statute to be given a meaning". Explain with reference to general principles of interpretation.

   "இயற்றப்பட்ட சட்டத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் விளக்கம் கொடுக்கப்பட வேண்டும்" – சட்டப்பொருள் விளக்கத்தின் பொதுவான கோட்பாடுகளை கொண்டு விளக்கவும்.

2. Elucidate the statement "Beneficial Construction is a tendency rather than a rule".

   "பயன்மிகு பொருள் கொள்முறை, ஒரு விதி என்பதை விட ஒரு போக்கு எனலாம்" என்ற உரையை விளக்குக.

3. "The provisions of the General Clauses Act, 1897 is the basis for all laws" – Comment.

   "1897ம் ஆண்டின் பொது வகைய சட்டப் பிரிவுகளே எல்லா சட்டங்களுக்கும் அடிப்படை" – விமர்சிக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும் :

4. Explain with reference to decided cases the "mischief rule" of construction.

   "கேடு அகற்றல் விதி" மூலம் பொருள் விளக்கம் காண்பதை முடிவுற்ற வழக்குகளுடன் விளக்குக.

5. Examine the various principles of interpretation of the Constitution.

அரசமைப்புச் சட்டத்தின் சட்டப்பொருள் விளக்கத்தின் பல்வேறு கோட்பாடுகளை ஆராய்க.

6. Explain briefly the various classification of statutes, with reference to object and purpose of the statutes.

சட்டத்தின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டங்களில் பலவாறான இனங்களை சுருக்கமாக விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Casus Omissus

விடுபட்ட விபரம்

(b) Smith vs Hughes

ஸ்மித் எதிர் ஹியூஸ்

(c) Noscitur-a-Sociis

தொடர்பு கண்டு பொருள் கொள்ளும் விதி

(d) Marginal notes

ஓரக்குறிப்புகள்

(e) Declaratory Statutes

விளம்புகைச் சட்டங்கள்

(f) Ut res magis valeat quam pereat

ஒரு விஷயத்தை இல்லா நிலை ஆக்குவதை விட செயலாக்கம் கொடுப்பதே நன்று.

(g) Doctrine of pith and substance

மையக் கருப்பொருள் கோட்பாடு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The request of 'A', who is under preventive detention, to make his representation before the advisory board on preventive detention by a legal practitioner of his choice was rejected. 'A' contends that it is violative of his fundamental rights. Decide.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 'அ' என்பவர் தடுப்புக் காவல் ஆலோசனை குழுமம் முன்பு தான் விரும்பும் வழக்குரைஞரால் தனது முறையீட்டுரையினை சமர்ப்பிக்க கோருகிறார். அவரது கோரிக்கை நிராகரிக்கப்படுகின்றது. அச்செயல்முறை தனது அடிப்படை உரிமைக்கு எதிரானதென வாதிடுகிறார். முடிவு காண்க.

9. A full bench of three judges was constituted by the Supreme Court to interpret the Constitution, which decided the case unanimously. Latter the decision was impugned as erroneous and therefore a bench of five judges was constituted to review the case. Discuss the constitutional and jurisprudential requirement of constituting a constitutional bench.

மூன்று நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற முழு நீதியகம் ஒரு மனதுடன் அரசமைப்புப் பொருள் விளக்க தீர்ப்பு வழங்கியது. பின்னர் அத்தீர்ப்பு செல்லாது எனக் கூறி அதை மறு ஆய்வு செய்ய ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசமைப்பு நீதியகம் அமைக்கப்பட்டது. ஒரு அரசமைப்பு நீதியகம் அமைக்கப் பெற தேவையான அரசமைப்பு மற்றும் சட்டவியல் கூறுகளை விவாதிக்க.

10. A taxation law enacted by the State of Tamil Nadu contravenes the provisions of a law enacted by the center. Raju, who is prosecuted for contravention of the state statute, takes the defence that he is in compliance with centre's legislation. Decide.

தமிழ்நாடு அரசு இயற்றிய வரிவிதிப்பு சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்ட வரிவதிப்பு சட்டத்தின் விதிகளுக்கு முரணாக உள்ளது. மாநில சட்டத்தை மீறியதற்காக வழக்கு தொடரப்பட்ட ராஜூ, மத்திய சட்டத்திற்குட்பட்டது என்று வாதாடுகிறார். முடிவு காண்க.

Register No. | | | | | | | | |

**TA3D**

**5149–22**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

COMPANY LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The State of mind of the Directors is the State of mind of the Company" – Explain the powers and duties of Directors in the Company.

   ''இயக்குனர்களின் மனநிலையே நிறுவனத்தின் மனநிலையாகும்'' - இயக்குனர்களுக்கு நிறுவனத்திலுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகளை விளக்கவும்.

2. Enumerate the kinds of Share capital and explain the principles and restrictions as to allotment of shares.

   பங்கு மூலதனத்தின் வகைளை குறிப்பிட்டு பங்கு ஒதுக்கீட்டுக்குரிய விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை விளக்கவும்.

3. Does the Lifting of the Corporate Veil prove to be advantageous or disadvantageous to the company? Analyse.

   நிறுவன திரை விலக்கல், நிறுவனத்திற்கு சாதகமானதா? பாதகமானதா? ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is Insider trading? What are the penalties and adjudication under the SEBI Act (The Securities and Exchange Board of India Act, 1992)?

   உள்பேர வர்த்தகம் என்றால் என்ன? செபி சட்டத்தின் (இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம்) கீழ் உள்ள அபராதங்கள் மற்றும் தீர்வழிகளை குறிப்பிடவும்.

5. Differentiate Ordinary resolution from special resolution passed in company meeting.

நிறுவன கூட்டத்தில் நிறைவேற்றப்படும் பொது தீர்மானம் மற்றும் சிறப்பு தீர்மானத்தை வேறுபடுத்துக.

6. What are the contents of Prospectus and State the golden legacy role in framing the Prospectus.

திட்ட அறிவிப்பின் உட்கூறுகள் யாவை? திட்ட அறிவிப்பை உருவாக்குவதில் உள்ள தங்க மரபு விதி குறித்து விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following.
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) National Company Law Tribunal
தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம்

(b) Distinguish Company and Partnership firm.
நிறுவனம் மற்றும் கூட்டாண்மை நிறுமத்தை வேறுபடுத்துக.

(c) Pre-incorporation Contracts.
நிறுவன பதிவிற்கு முந்தைய ஒப்பந்தங்கள்.

(d) Corporate Social Responsibility.
நிறுவன சமூக பொறுப்பு.

(e) Proxy.
பதிலாள் வாக்குரிமையாளர்.

(f) Floating charge.
படரும் பற்று.

(g) Royal British Bank v. Turquand.
ராயல் பிரிட்டிஷ் வங்கி எதிர் டர்குவாண்ட்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்டவகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' applied for 300 shares in a company. A clerk in the company who owned no shares executed a transfer in favour of 'A'. The company without verifying clerk's share certificate registered and issued new share certificate to 'A'. Analyse whether the share certificate of 'A' is valid.

'அ' என்பவர் ஒரு நிறுவனத்தில் 300 பங்குகளுக்கு விண்ணப்பித்தார். பங்குகள் எதுவும் இல்லாத அந்நிறுவனத்தின் கணக்காளர் 'அ'விற்கு பங்கு மாற்றம் செய்தார். கணக்காளரின் பங்கு சான்றிதழை சரிபார்க்காமல், நிறுவனமும் அம்மாற்றத்தை பதிவு செய்து 'அ'விற்கு புது பங்கு சான்றிதழை வழங்கியது. 'அ'வின் பங்கு சான்றிதழ் செல்லுமா என்று ஆராய்க.

9. The directors of the company were authorised to make payment towards any charitable or benevolent object. With shareholders' resolution, the directors paid two lakhs to a trust formed for the purpose of promoting technical and business knowledge. Is company liable? Is the payment valid? Analyse.

நிறுவனத்தின் இயக்குனர்கள் தொண்டு அல்லது கருணை சார்ந்த நோக்கத்திற்கு நிதியுதவி அளிக்க அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தனர். பங்குதாரர்களின் தீர்மானத்துடன், தொழில்நுட்பம் மற்றும் வியாபார அறிவை மேம்படுத்தும் அறக்கட்டளைக்கு, இயக்குனர்கள் இரண்டு லட்சம் நிதி வழங்கினர். இந்நிதியுதவி செல்லுபடியாகுமா? நிறுவனத்தை கட்டுபடுத்துமா? ஆராய்க.

10. The company adjourned Annual General Meeting of the year 2019 and finally conducted it on March 2020. Then the next Annual General Meeting was held on June 2021. Discuss the validity of meeting of the company. Is company liable?

நிறுவனம் 2019-இல் நடைபெற வேண்டிய ஆண்டு பொது கூட்டத்தை தள்ளிவைத்து 2020, மார்ச் மாதத்தில் நடத்தியது. பின்பு அடுத்த ஆண்டு பொது கூட்டத்தை 2021 ஜூன் மாதத்தில் நடத்தியது. கூட்டத்தின் செல்லுந்தன்மையை விளக்குக. நிறுவனம் பொறுப்பாகுமா?

Register No. | | | | | | | | |

**TA3E**

**5150–22**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Three – year Regular Course)

Second Year – Third Semester

BANKING LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : 2½ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is Banker's Lien? Explain about various kinds of Lien.

   வங்கியரின் பற்றுரிமை என்றால் என்ன? பற்றுரிமையின் பல்வேறு வகைகளை விளக்குக.

2. Explain the liberalization and nationalization of Banks in the process of evolution of banking law in India.

   இந்தியாவில் வங்கியியல் சட்டம் தொடங்கப்பட்ட நிகழ்வில் தாராளமயமாக்கல் மற்றும் தேசியமயமாக்கல் கோட்பாடு பற்றி விளக்குக.

3. What is 'Pass book'? Discuss about the different types of Accounts in a banking system.

   செல்லேடு என்றால் என்ன? வங்கி அமைப்பில் உள்ள பல்வேறு வகையான கணக்குகள் பற்றி விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the features of the revocable and irrevocable letters of credit?

   திரும்ப பெறதக்க மற்றும் திரும்பபெற இயலாத கடனுறுதி கடிதத்தின் தன்மைகள் பற்றி விளக்குக.

5. What are the salient feature of the Banking Regulation Act, 1949?

   வங்கி ஒழுங்குமுறை சட்டம் 1949 ன் சிறப்பு இயல்புகள் யாவை?

6. Define "Honouring of a Cheque". Explain the precaution to be taken by a banker while honouring a cheque.

காசோலையினை மதிப்பீடு செய்தல் என்பதை வரையறை செய்து ஒரு காசோலையை மதிப்பீடு செய்யும் நேர்வில் வங்கியர் பின்பற்றவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைப்பற்றி விளக்குக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக

(a) Rule in Clayton's Case

கிளைட்டன் வழக்கு விதி

(b) Paying Banker

கொடுக்கும் வங்கியர்

(c) Crossing of Cheque

காசோலையை குறுக்குக் கோடிடுதல்

(d) Banking Ombudsman

வங்கி முறைகேள் அலுவலர்

(e) Minor Account

இளவர் கணக்கு

(f) Holder and Holder-in-due course

உடைமையர் மற்றும் முறைப்படி உடைமையர்

(g) Deposit receipt

வைப்பீடு இரசீதுகள்

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Indian Bank receives Rs.10,000/- on behalf of Mrs. Priya from Bharathi, but by mistake the bank enters Rs.1,00,000/- in Priya's account. Can Priya seek advantage of the bank's mistake? Decide.

இந்தியன் வங்கி திருமதி பிரியா என்பவருக்கு பாரதி என்பவரிடம் இருந்து ரூபாய் 10,000 பெறுகின்றது. ஆனால் தவறுதலாக பிரியாவின் வங்கி கணக்கில் ரூ.1,00,000 வரவு வைத்துவிடுகின்றது. வங்கியின் தவறை பிரியா தனக்கு சாதகமாக பயன்படுத்த முடியுமா? முடிவு செய்க.

9. 'X', 'Y' and 'Z' were the directors of the Bank. 'X', 'Y' and 'Z' challenged the Banks Nationalization Ordinance issued by the President of India on the grounds that they were shareholders and account holder in several other Banks. 'X', 'Y' and 'Z' contended that their fundamental rights as share holders are impaired by State Action. Decide.

'X', 'Y' மற்றும் 'Z' ஆகியோர் ஓர் வங்கியின் இயக்குனர்களாக இருந்தனர். 'X', 'Y' மற்றும் 'Z' ஆகியோர் தாங்கள் இன்னும் பிற வங்கிகளின் கணக்குதாரர் மற்றும் பங்குதாரர் என்றும் வங்கிகள் தேசியமயமாக்கல் அவசர ஆணை இந்திய குடியரசு தலைவரால் பிறப்பிக்கப்பட்டது மற்றும் அரசின் செயல்பாடானது பங்குதாரர்களின் அடிப்படை உரிமைக்கு எதிரானது என்று 'X', 'Y' மற்றும் 'Z' ஆகியோர் வாதிட்டனர். முடிவு செய்க.

10. 'X' issued a cheque to 'Y'. Before it is presented for encashment, 'X' issued a notice to 'Y' not to present the same for encashment and yet 'Y' presented the cheque to the Bank for payment. Further, 'X' instructed the bank to stop payment. The cheque was dishonoured by the bank for want of funds. Advise 'Y'.

'X' என்பவர் 'Y' என்பவருக்கு காசோலை ஒன்றை கொடுக்கிறார். அதை பணமாக்கும் முன்பே 'Y' க்கு 'X' அக்காசோலையை "பணமாக்கலுக்கு சமர்பிக்க வேண்டாம்" என அறிவிப்பு அனுப்புகிறார். அவ்வாறு இருந்தும் 'Y' அவரது காசோலையை பணமாக்கலுக்கு கொடுக்கிறார். மேலும் 'X' வங்கிக்கு பணம் வழங்கலை நிறுத்திவைக்க அறிவுறுத்துகிறார். அந்த காசோலையானது பண தேவைக்கு மறுதலிக்கப்படுகின்றது. 'Y'க்கு அறிவுரை வழங்குக.

———————